சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 28/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (LW-2) | நாள் | 13.11.2025 |
| பெயர் | பூபாலன் | கிராமம் | நடராஜபுரம் |
| தந்தை பெயர் | K. ஆனந்தி | தொழில் | வெல்டிங் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | 23 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் சென்னையில் வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். நடராஜபுரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பக்கத்து ஊர் உத்தண்டராயன்பேட்டையை சேர்ந்தவர். அசா 1 ஐ எனக்கு தெரியும். நடராஜபுரம் வடக்கு தெருவில் என் மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் இந்து-ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். எங்கள் ஊரை சேர்ந்த ராஜேஷ், என்பவர் இடது கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட செயற்கை கால் பொருத்தப்பட்ட மாற்றுத்திறனாளி, வினோத்ராஜ், உதயராஜ், வரதம்பட்டை சேர்ந்த ராஜேஷ், சரத் நாங்கள் அனைவரும் நண்பர்கள். நாங்கள் அனைவரும் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள். கடந்த 03.07.2024 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் வரதம்பட்டு நத்தந்தோப்பு பாலத்தில பேசிக்கொண்டிருந்தோம். எங்களுடனிருந்த ராஜேஷ் எனக்கு வயிறு வலிக்குது நான் டாய்லெட் போய்ட்டு வரேன் என்று சொல்லிவிட்டு நடராஜபுரம் பாரத் பெட்ரோல் பங்கிற்கு சென்றார். அவர் தரையில் உட்கார்ந்து பாத்ரூம் போகமுடியாது. நாங்களும் வீட்டிற்கு போகவேண்டுமென்பதால் அசா1 வினோத்ராஜ் என்பவர் மூலம் ராஜேஷ்க்கு போன் செய்தோம் அவர் போனை அவர் எடுக்கவில்லை. அவரை பார்க்க நாங்கள் பெட்ரோல் பங்கிற்கு சென்றோம். போற வழியில் எங்கள் ஊர்

P. Boobalan

சுடுகாட்டிற்கு பக்கத்தில் ரஞ்சித் நீளமான வீச்சரிவாளை வைத்து நின்று கொண்டிருந்தார். ராஜேஷை பார்த்து அவர் பறக்குச்சிக்காரி தேவுடியா மகனே என்னோட ஆட்டோ மோதியதற்கு வீடு தேடி வந்து பணம் கேட்டு பிரச்சனை செய்ததற்கு நீதான் முதல் காரணம் இத்தோடு செத்து தொலைஞ்சு போடா என்று தலையிலும் முகத்திலும் மாறி மாறி வெட்டினார். ராஜேஷ் ஆஜர் எதிரி ரஞ்சித்தின் கைலியை பிடித்து கீழே விழுந்துவிட்டார். வினோத்ராஜ், உதயராஜ் மற்றும் நான் அவரை காப்பாற்ற சென்றோம் அவர் அரிவாளை வைத்து எங்களை வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் பயந்து கொண்டு ஓடிவிட்டோம். பிறகு ரஞ்சித் அவரின் பைக்கை எடுத்து கொண்டு பட்டவர்த்தி பக்கம் சென்றுவிட்டார். நாங்கள் திரும்ப போய் ராஜேஷை பார்த்தபோது பேச்சு மூச்சு இல்லாமல் இறந்துகிடந்தார். ஆஜர் எதிரி இந்து – கள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். அவருக்கு ஆதி திராவிடர்களை பார்த்தால் பிடிக்காது. அவர் மீது ஏற்கனவே மணல் மேடு காவல் நிலையத்தில் மூன்று SC/ST வழக்குகள் நிலுவையில் உள்ளது. கடந்த 15.10.2023 அன்று கலியபெருமாள் மகன் அரவிந்த என்பவர் மீது ஆஜர் எதிரியின் ஆட்டோ மோதியதால் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவருக்கு 15 நாட்கள் மருத்துவ சிகிச்சையில் இருந்தார். அதற்கு ராஜேஷ்ம் எங்கள் ஊர்காரர்கள் ஐந்து பேரும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்றார்கள். ஏற்பட்ட விபத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டார்கள். அப்போது இரு தரப்பினருக்கு சண்டை வந்தது. அது தொடர்பாக மணல் மேடு காவல் நிலையத்தில் இருதரப்பினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அது முதல் ஆஜர் எதிரி ரஞ்சித் ராஜேஷை ஒரு கால் இல்லாதப்பேவே ரொம்ப ஆடுறான் நான் எப்போ பட்டவர்த்தி, கடைதெருவிற்கு செல்லும்போதெல்லாம் ராஜேஷ் உட்காந்திருப்பதால் ஆஜர் எதிரி ராஜேஷ் என் கையால் தான் சாகபோகிறான் என்று சொன்னதாக ராஜேஷ் என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரி சொன்னது போலவே ராஜேஷை வெட்டிக்கொலை செய்து விட்டார். இந்த சம்பவம் தொடர்பாக வினோத்ராஜ் மூலம் ராஜேஷ் அம்மா

P. Boobalan

அப்பாவிற்கு தகவல் சொன்னோம். வினோத்ராஜ் பெயரில் புகார் எழுதி மணல் மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் துணைக்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

P. Boobalan

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் [illegible]ரிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/11/..

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 28/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW-1) | நாள் | 13.12.2025 |
| பெயர் | வினேத்ராஜ் | தொழில் | வெல்டிங் |
| தந்தை பெயர் | சேகர் | வயது | 24 |
| கிராமம் | நடராஜபுரம் | தாலுக்கா | மயிலாடுதுறை |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை நடராஜபுரத்தில் வசிக்கிறேன். வெல்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் உத்தண்டராயபேட்டையை சேர்ந்தவர். நான் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். கடந்த 03.07.2024 அன்று சுமார் இரவு 10.00 மணியளவில் வரதம்பட்டு நத்தந்தோப்பு பாலத்தில் நடராஜபுரத்தை சேர்ந்த ராஜமாணிக்கம் மகன் இவ்வழக்கில் இறந்து போன ராஜேஷ், புகழேந்தி மகன் பூபாலன், மோகன் மகன் உதயராஜ், வரதம்பட்டை சேர்ந்த சங்கர் மகன் சரத், ரவி மகன் ராஜேஷ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களுடன் இருந்த இவ்வழக்கில் இறந்துபோன ராஜேஷ் வயிறு வலிப்பது போல் இருக்கிறது அதனால் அருகில் நடராஜபுரத்தில் உள்ள பாரத் பெட்ரோல் பங்கில் மலம் கழிக்க சென்றார். இவ்வழக்கில் இறந்து போன ராஜஷ்க்கு இடது காலில் அறுவை சிகிச்சை செய்து செயற்கை கால் பொருத்தப்பட்டிருந்தது. அதனால் அவரால் சாதாரண இந்தியன் கழிவறையில் மலம் கழிக்க முடியாது. அதனால் வெஸ்டர்ன் பாத்ரூம் வேண்டுமென்பதற்காகத்தான் பெட்ரோல் பங்கிற்கு சென்றார். போனவர்

S. Vinoth

திரும்பி வருவதற்கு கால தாமதம் ஏற்பட்டது. என்னுடைய போன் மூலம் அவருக்கு போன் செய்தேன். அவர் போனை எடுக்கவில்லை. பிறகு உதயராஜ், பூபாலன், நான் மூவரும் உதயராஜ் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் பங்கிற்கு சென்றோம். அப்போது ராஜேஷ் கருப்பு சாமி கோவில் எதிரே இருசக்கர வண்டியில் உட்கார்ந்திருந்தார். ஆஜர் எதிரி ராஜேஷ்கு எதிர்புறம் உட்கார்ந்திருந்தார். கையில் ஒரு நீளமான அரிவாளை வைத்துக்கொண்டு இரவு 10.30 மணியளவில் என்னுடைய ஆட்டோ மோதியதற்கு என்னிடம் பணம் கேட்டு வீடு வரைக்கும் வந்து தகராறு செய்ததற்கு முதல் காரணம் நீ தான் என்று ராஜேஷிடம் கூறி பறக்குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே இதோடு செத்து தொலைந்து போடா என்று திட்டி அப்போதான் மற்ற பற பையலுகளும் பயப்படுவான்கள் என்று சொல்லி அவர் கையில் வைத்திருந்த அரிவாளை வைத்து ராஜேஷ் தலையிலும் முகத்திலும் மாறி மாறி வெட்டினார். என்னிடம் காட்டப்படும் **அரிவாள் அது சாபொ 1** ஆகும். நாங்க மூவரும் ராஜேஷை நோக்கி ஓடினோம். உங்களையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி வீச்சருவாளை எங்கள் மீதும் வீசினார். நாங்கள் மூவரும் பயந்து கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டோம். ரஞ்சித் அரிவாளை எடுத்து கொண்டு மஞ்சக்கலர் ஸ்கூட்டியில் ஏறிபோய் விட்டார். பிறகு ராஜேஷை போய் பார்த்தோம். அவர் பேச்சு மூச்சு இல்லாமல் முகத்தில் ரத்தக்காயங்களுடன் கீழே கிடந்தார். பிறகு எங்கள்ஊர்காரர்களுக்கு போன் செய்து தகவல் சொன்னோம். ஊர்காரர்கள் அனைவரும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். ராஜேஷ் அம்மாவும் அப்பாவும் வந்துவிட்டார்கள். பிறகு கொஞ்ச நேரத்தில் மணல்மேடு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டனர்.

S. vinothraj

நான் மணல் மேடு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த அந்த **புகார் அசாஆ 1** ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ரஞ்சித் அவரின் ஆட்டோவில் ஏற்கனவே எங்கள் ஊரை சேர்ந்த கலியபெருமாள் மகன் அரவிந்த் மீது மோதி அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு 15 நாள் மருத்துவமனை சிகிச்சையில் இருந்தார். பிறகு எங்கள் ஊரை சேர்ந்த ஐந்து பேர் இறந்து போன ராஜேஷ் ஆகியோர் ஆஜர் எதிரி வீட்டிற்கு நஷ்ட ஈடு கேட்டு சென்றார்கள். அங்கு அவர்களை பறப்பயலுகளா என் வீடு தேடி காசு கேட்டு வருவீங்களா என்று தகராறு நடந்தது. அதனால் கொஞ்ச நாள் முன்பு அவர் மீதும் ஆஜர் எதிரி மீதும் வழக்கு போட்டார்கள். ஆஜர் எதிரி ரஞ்சித்திற்கு ஆதிதிராவிடர்களை பார்த்தால் பிடிக்காது. அவர் மீது ஏற்கனவே மூன்று SC/ST வழக்குகள் நிலுவையில் உள்ளது. வழக்கில் இறந்துபோன ராஜேஷ் கிராமத்தில் பட்டவர்த்தி, பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் மாற்றுத்திறனாளி என்பதால் நின்று பேசமுடியாததால் அவரின் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து பேசுவார். அவர் அவ்வாறு உட்கார்ந்து பேசும்போது ஆஜர் எதிரி எங்க ஏரியாவிலே வந்து எங்கள் முன்பே உட்கார்ந்து இருக்கிறார் என்று ராஜேஷ்க்கு என்றைக்கா இருந்தாலும் என் கையில் தான் சாவு என்று சொல்வார். அதுபோலவே கடந்த 03.07.2024 அன்று ராஜேஷை வெட்டி கொலை செய்துவிட்டார். அதன்பிறகு சம்பவ இடத்திற்கு காவல் துணைக்காணிப்பாளர் வந்தார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை சொன்னேன்.

குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுத்தாக்கல் செய்ததால் ஒத்திவைக்கப்படுகிறது.

S. vinothraj

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை